பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.120 நாள்: 22.08.2019

**வேலங்காடு இந்து மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் பொதுமக்கள் அரும்பாக்கம் மற்றும் வில்லிவாக்கம் இந்து மயானபூமிகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–101, வேலங்காடு இந்து மயானபூமியில் இறந்தவர் உடலை எரிக்கும் இயந்திரத்தில் பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், 23.08.2019 முதல் 23.09.2019 ஆகிய நாட்களுக்கு மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பொதுமக்கள் பராமரிப்பு பணி நடைபெறும் 23.08.2019 முதல் 23.09.2019 ஆகிய நாட்களுக்கு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அரும்பாக்கம் இந்து மயானபூமி மற்றும் வில்லிவாக்கம் இந்து மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி